வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 11.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150ஆவது ஆண்டு விழா குறித்த விவாதம், மாநிலங்களவையில் இன்று மீண்டும் நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மணிப்பூருக்கு 2 நாள் பயணமாக சென்றுள்ளார்.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த தினத்தை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் , பிரதமர், உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளனர்.

புதுச்சேரியில், மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா, அரசு சார்பில் கொண்டாடப் பட்டது.

---

*மாநிலங்களவை 1 (9)*

தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150ஆவது ஆண்டு விழா குறித்த விவாதம், மாநிலங்களவையில் இன்று மீண்டும் தொடங்கியது. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, கடந்த செவ்வாய்க் கிழமையன்று வந்தே மாதரம் குறித்த விவாதத்தை தொடக்கி வைத்தார். விவாதத்தை நிறைவு செய்து பேசிய மத்திய அமைச்சர் திரு. ஜே.பி நட்டா, வந்தே மாதரம் என்பது, நாட்டின் ஆன்மாவை தட்டி எழுப்பும் ஒரு மந்திரம் என்றும், நாட்டின் கலாச்சாரத்துடன் இணைவதற்கான வாய்ப்பை

இப்பாடல் வழங்குகிறது என்று கூறினார். திரு. ஜே.பி நட்டாவின் உரை குறித்த மேலும் சில தகவல்கள்……

**(வாய்ஸ்)**

*மாநிலங்களவை* 2 (17)

**(வாய்ஸ்)**

மாநிலங்களவையில் பேசிய திரு. ஜே.பி நட்டா, சுதந்திரப் போராட்டத்தின் போது நடந்த பல வரலாற்று நிகழ்வுகளை இந்த பாடல் உள்வாங்கி இருப்பதாகவும், சுதந்திரப் போராட்டத்தின் போது, அனைவரையும் உற்சாகப்படுத்தும் விதமாக வந்தே மாதரம் அமைந்தது என்று கூறினார். காங்கிரசின் குற்றச்சாட்டு குறித்து திரு. நட்டா கூறுகையில், வந்தே மாதரம் பற்றிய விவாதத்தின் மூலம், முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நற்பெயருக்கு கலங்கம் விளைவிக்க அரசு விரும்பவில்லை என்றும் கூறினார். நேருவை இழிப்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்றும், வரலாற்றை நேரடியாக பதிவு செய்யவே அரசு விரும்பியதாக தெரிவித்தார். நம் நாட்டின் சுதந்திரத்திற்கு பிறகு வந்தே மாதரம் பாடலுக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை என்றும், அதற்கு அப்போதைய அரசாங்கமே காரணம் எனவும், திரு. நட்டா குற்றம் சாட்டினார். கடந்த 2 நாட்களாக, அவையில் நடைபெற்ற விவாதத்தில் 80க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றதாக தெரிவித்த மத்திய அமைச்சர், இந்த விவாதத்தின் மூலம், சுதந்திரப் போராட்டத்தை நேரடியாக காண இயலாத இளைய தலைமுறையினர், தேசிய பாடலைப் பற்றிய ஆழமான புரிதல் அவர்களுக்கு ஏற்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

--------------------------------

*குடியரசுத் தலைவர்* (16)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மணிப்பூருக்கு 2 நாள் பயணமாக சென்றுள்ளார். அவருக்கு, இந்திய ரிசர்வ் பட்டாலியன் மகளிர் படைப் பிரிவு சார்பில், அன்பான வரவேற்பும், மரியாதை அளிக்கப்பட்டது.

அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்கிறார். ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கடைபிடிக்கப்பட்ட, மணிப்பூர் பெண்களுக்கு எதிரான கொள்கைகளை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சியை நினைவு கூறும் வகையில், இம்பாலில் நடைபெறும் நுபி லால் தின நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார். அப்போது, 1939ஆம் ஆண்டு, டிசம்பர் 12ஆம் தேதி ஆங்கிலேயர்களுக்கு எதிராக நின்று தீரத்துடன் போராடிய மணிப்பூரின் துணிச்சலான பெண்கள் குறித்தும் அவர் நினைவு கூறுவார். அதனை தொடர்ந்து, இம்பால் மற்றும், சேனாபதி மாவட்டத்தில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார். அதன் பின்னர், சேனாபதி தலைமையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், இடம்பெயர்ந்த அம்மாநில மக்களை சந்தித்து அவர்களுடன் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்துரையாட உள்ளார்.

-------------------------------

*மகாகவி 1 (17)*

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் , பிரதமர், உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளனர். குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அச்சமற்ற தேசியவாதியும், தொலை நோக்குப் பார்வை கொண்ட சீர்திருத்தவாதியுமான பாரதியார், தமிழுக்கும், நாட்டின் விடுதலைக்கும் அயராது பாடுபட்டவர் என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்தியதில், மகாகவி பாரதியாரின் பங்களிப்பு ஈடு-இணையற்றது என்று குறிப்பிட்டுள்ளார். அவரது கவிதைகள், துணிச்சலை வளர்த்தது என்றும், அவரது சிந்தனைகள், எண்ணற்ற மக்களின் மனதில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலோடு இருந்ததாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், தமது வீரம் சொறிந்த கருத்துக்கள், மற்றும், உறுதிமிக்க தேசபக்திப் பாடல்கள் மூலம், இளைஞர்களிடையே விடுதலை உணர்வை மேலோங்கச் செய்தவர் பாரதியார் என்று தெரிவித்துள்ளார்.

*மகாகவி 2 (3)*

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், சிந்தனை, சொல், செயல் என அனைத்திலும் புதுமையை புகுத்தியவர் மகாகவி பாரதியார் என்று தெரிவித்துள்ளார்.

-------------------------------

*நிதின் கட்கரி* (8)

பெட்ரோலில், 20 சதவிகித எத்தனால் கலப்பதன் மூலம், இந்தியாவில் கார்பன்டை ஆக்சைடு வெளியேற்றம் 736 லட்சம் மெட்ரிக் டன்கள் குறைக்கப் பட்டுள்ளதாக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். மக்களவையில், இன்று கேள்வி நேரத்தின் போது இது தொடர்பான துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், எத்தனால் ஒரு பசுமை எரிபொருள் என்றும், அது காற்று மாசுபாட்டை குறைத்து, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க உதவுகிறது என்றும் தெரிவித்தார்.

-------------------------------

*நீதித்துறை* (10)

நீதித்துறையில், செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை ஏற்றுக்கொள்வது, பயன்படுத்துவது, மற்றும், அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பான முயற்சிகளை மேற்பார்வையிடும் வகையிலான, உச்சநீதிமன்றத்தின் செயற்கை நுண்ணறிவுக் குழுவை, இந்திய தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் மறு சீரமைப்பு செய்துள்ளார். 4 பேர் கொண்ட இந்த குழுவிற்கு, உச்சநீதிமன்ற நீதிபதி திரு. பி.எஸ். நரசிம்ஹா தலைவராக செயல்படுவார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. நீதி வழங்கல் அமைப்பில் செயல்திறன், மற்றும், வெளிப்படை தன்மையை

மேம்படுத்தும் நோக்கத்தில், மறு சீரமைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுக் குழு உருவாக்கப் பட்டுள்ளது.

--------------------------------

*மகாகவி பாரதியார்- புதுச்சேரி* (14)

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா, புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. இதனையொட்டி, பாரதி பூங்காவில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவ சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பி.ஆர். என் திருமுருகன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாய் ஜே சரவணன் குமார், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமி காந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து, ஈஸ்வரன் கோவில் வீதியில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

--------------------------------

SIR (7)

புதுச்சேரியில், SIR எனப்படும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி இன்றுடன் நிறைவு பெறுகிறது. இந்திய தேர்தல் ஆணையம் பிழையற்ற வாக்காளர் பட்டியலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடைபெற்ற SIR பணியில், கணக்கெடுப்பு படிவத்தை பெற்று, ஆர்வத்துடன் பூர்த்தி செய்து கொடுத்தாக திலாஸ் பேட்டையைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்ற வாக்காளர் எமது செய்தியாளரிடம் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறுகையில்.....

(வாய்ஸ்-கலியபெருமாள்)

--------------------------------

*புதுச்சேரி வேளாண் துறை (12)*

புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த தோட்டக்கலை பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில், 2025-26ஆம் ஆண்டிற்கான பேட்டரி மூலம் இயங்கும் விசைத் தெளிப்பானை, மானிய விலையில் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக, புதுச்சேரி வேளாண் துறையின் தோட்டக்கலைப் பிரிவு இணை வேளாண் இயக்குனர் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த விண்ணப்பங்களை, புதுச்சேரி தாவரவியல் பூங்காவில் இயங்கும் கூடுதல் வேளாண் அலுவலகம் மூலமாகவோ, அல்லது, இத்துறையின் இணைய தளமான agri.py.gov.in மூலமாகவோ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை இம்மாதம் 22ஆம் தேதிக்குள் தாவரவியல் பூங்காவில் இயங்கம் தோட்டக் கலை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

--------------------------------

*சுப்ரியா* (9)

காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில், சிறப்பாக செயல்பட்டதற்காக, தமிழக அரசின் கூடுதல் தலைமை செயலாளர் திருமதி சுப்ரியா சாகுவிற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழலுக்கான, உயரிய விருதை பெற்றுள்ளார். இதற்காக அவருக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார். இந்த விருதால், தமிழகம் பெருமைப் படுவதாகவும் முதலமைச்சர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ஈரநிலப் பாதுகாப்பு, மற்றும், சுற்றுச் சூழல் தொடர்பான மேம்பாட்டுப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், இந்த விருது ஊக்கமாக அமையும் எனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

--------------------------------

இண்டிகோ (8)

இண்டிகோ விமான நிறுவனத்தின் செயல்பாட்டு கோளாறு காரணமாக பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த இழப்பீடு பயண வவுச்சர் வடிவில் வழங்கப்படும் என்றும், அடுத்த 12 மாதங்களில் இண்டிகோ நிறுவன விமானங்களில் பயணிப்பதற்கு இதை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த மாதம் 3,4, மற்றும், 5ஆம் தேதிகளில் இந்நிறுவனத்தின் விமான சேவையில் பாதிப்பு ஏற்பட்டதால், பயணிகள் பாதிப்பிற்கு உள்ளானார்கள்.

-------------------------------

கிரிக்கெட் (6)

இந்திய-தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான, 2ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி சண்டிகரில், இன்றிரவு 7 மணிக்கு தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தியா தற்போது 1க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இத்தொடரின் அடுத்த போட்டி, தர்மசாலாவிலும், 4ஆவது போட்டி லக்னோவிலும், இறுதிப் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்திலும் நடைபெற உள்ளது.

-------------------------------

இஸ்ரோ *(10)*

தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் அமைந்துள்ள ஏவுதளத்தில் இருந்து, வரும் 2027ஆம் ஆண்டின் தொடக்கத்தில், விண்ணில் ராக்கெட் ஏவப்படும் என்று, இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார். இன்று, திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள இஸ்ரோ மையத்தில், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மனிதர்களை விண்ணுக்கு அனுப்பி ஆராய்ச்சி மேற்கொள்ளும் ககன்யான் திட்டத்திற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாகவும், வரும்

2027ஆம் ஆண்டு, இந்த விண்கலத்தை விண்ணிற்கு அனுப்ப இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

--------------------------------

*நபார்டு வங்கி (12)*

சரக்கு மற்றும் சேவை வரிக் குறைப்பு காரணமாக கிராமப்புற மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாக, மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பான நபார்டு வங்கியின் ஆய்வறிக்கையை சுட்டிக் காட்டி, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கிராமப்புறங்களில் வசிக்கும் 80 சதவிகித குடும்பங்கள், தங்களது மாத வருமானத்தில் 67.3 சதவிகிதத்தை நுகர்வுக்காக செவிடுவதாக தெரிவித்துள்ளது. இது, கிராமப்புற பொருளாதாரத்தில் காணப்படும் வருமான வளர்ச்சியை பிரதிபலிப்பதாக உள்ளது என்றும், 42.2 சதவிகித கிராமப்புற குடும்பங்கள், வருமான வளர்ச்சியை கண்டுள்ளதாகவும், நபார்டு வங்கியின் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது என்றும் அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. நாடு முழுவதும் 2 மாதங்களுக்கு ஒருமுறை நபார்டு வங்கி இந்த கணக்கெடுப்பை மேற்கொள்கிறது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150ஆவது ஆண்டு விழா குறித்த விவாதம், மாநிலங்களவையில் இன்று மீண்டும் நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, மணிப்பூருக்கு 2 நாள் பயணமாக சென்றுள்ளார்.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்த தினத்தை ஒட்டி, குடியரசுத் துணைத் தலைவர் , பிரதமர், உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தி உள்ளனர்.

புதுச்சேரியில், மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழா, அரசு சார்பில் கொண்டாடப் பட்டது.